# பொருளாதாரத்தில் நலிந்தோருக்கான 10% இட ஒதுக்கீடு: தமிழ்நாடு அரசுக்கு பிராமணர் சங்கம் மீண்டும் வலியுறுத்தல்

சென்னை, மே 27–

**மத்திய அரசு சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தியுள்ள பொருளாதார அடிப்படையில் நலிந்தோருக்கான 10% இட ஒதுக்கீட்டை தமிழக அரசு கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று எழுத்து மூலமாக தெரிவித்துள்ளது.** இந்த முடிவை தமிழக அரசு பரிசீலனை செய்ய வேண்டும். நலிந்தோருக்கான 10% இட ஒதுக்கீட்டை அமல்படுத்தி முற்பட்ட சமூகங்களின் ஏழை, எளிய மற்றும் கிராமப்புற மக்களுக்கும் வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்றும் மீண்டும் தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் தாம்ப்ராஸ் மாநில செயற்குழு வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :–

மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் நடத்தப்படும் ஏழை எளிய மற்றும் கிராமப்புற மாணவ, மாணவிகளுக்கு பயனளிக்கும் ''நவோதயா'' பள்ளிகளை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் துவங்கத் தேவையான ஒத்துழைப்பை மத்திய அரசிற்கு வழங்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிப்பாடங்களை விருப்பப் படமாக (ஆப்ஷனல் சப்ஜெக்ட்) கற்றுக் கொடுக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

கேரள அரசு நியமித்திருக்கின்ற அடிப்படையில் தமிழகத்திலும் முற்பட்ட சமூகங்களை சார்ந்த நலிந்தோருக்கு உதவும் வகையில் ஒரு தனி நல வாரியம் அமைக்க வேண்டும்.

தமிழகத்தில் கஞ்சா மற்றும் இதர போதைப் பொருட்கள் நடமாட்டம் மிக அதிகமாக உள்ளதால் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளும், மகளிருக்கு எதிரான வன்முறைகளும், கொலைகளும் அதிகரித்து வருவதை அன்றாடம் செய்தித் தாள்களில் காண்கின்றோம். சமூகவிரோதிகள், பள்ளி, கல்லூரி மாணவர்களை போதை பழக்கத்திற்கு அடிமை யாகத்துவதும் அவர்களை சட்டவிரோத போதை பொருட்களை விநியோகம் செய்ய பயன்படுத்துவதும் அதிகரித்து வருவதாக சொல்லப்படுகின்றது.

எனவே தமிழக அரசு இவ்விஷயத்தில் கடும் நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக எடுத்து போதை பொருட்கள் நடமாட்டத்தை முழுவதுமாக தடுத்து நிறுத்த வேண்டும்.

அரசின் கட்டுப்பாட்டில் தற்போது உள்ள தமிழக கோவில்களை, மேலும் சிறப்பான முறையில் நிர்வகித்து பராமரிக்க உதவும் வகையில், அவைகளை ஓர் தன்னாட்சி உரிமை கொண்ட தனி வாரியம் அமைத்து நிர்வகிக்க வேண்டும். அதற்கான முதல்படியாக தன்னாட்சி வாரியத்திற்கான வழிமுறைகள், நெறிமுறைகள், நிர்வாக அமைப்பு ஆகியவைகளை பரிந்துரை செய்ய ஓர் தக்க நிபுணர் குழு அமைத்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு செயற்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# ஒரு நாளில் அதிக பாலிசிகள் விற்பனை: எல்ஐசி இந்தியா கின்னஸ் உலக சாதனை

## தலைமை செயல் அதிகாரி சித்தார்த்த மொஹந்தி பெருமிதம்

சென்னை, மே 27–

**24 மணிநேரத்தில் அதிக பாலிசிகளை விற்பனை செய்து உலக சாதனை படைத்ததன் மூலம் எல்ஐசி இந்தியா கின்னஸ் உலக சாதனை பட்டத்தை வென்றுள்ளது.**

கின்னஸ் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்த வரலாற்றுச் சாதனையானது, ஜனவரி 20ந் தேதி அன்று, அர்ப்பணிப்புணர்வு மிக்க எல்ஐசி முகவர்களின் சிறப்பான செயல்திறனால் சாத்தியமானது.

நடப்பு ஆண்டில் ஜனவரி 20ந் தேதி அன்று, எல்ஐசி நிறுவனத்தின் 4,52,839 முகவர்கள் மூலம் இந்தியா முழுவதும் 5,88,107 ஆயுள் காப்பீட்டு பாலிசிகள் விற்பனை செய்யப்பட்டது. 24 மணி நேரத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட இந்த மகத்தான முயற்சி ஆயுள் காப்பீட்டுத் துறையில் முகவர் உற்பத்தித்திறனுக்கான புதிய உலகளாவிய அளவுகோலை நிறுவியிருக்கிறது.

இந்த மதிப்புமிக்க கின்னஸ் உலக சாதனை பட்டத்தைப் பெற்றதில், இந்நிறுவனம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. இது இந்நிறுவன முகவர்களின் இடைவிடாத அர்ப்பணிப்பு, திறமை மற்றும் அயராத உழைப்பிற்கான ஒரு சிறந்த சான்றாகும். இந்த சாதனை எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் முக்கியமான நிதிப் பாதுகாப்பை வழங்கும் உன்னதமான நோக்கத்தைப் பிரதிபலிக்கிறது என்று தலைமை செயல் அதிகாரியும் மேலாண்மை இயக்குனருமான சித்தார்த்த மொஹந்தி பெருமிதத்தோடு கூறினார்.

"ஒவ்வொரு முகவரும் "மேட் மில்லியன் டே" ஜனரி 20ந் தேதி அதாவது தலா ஒரு பாலிசியாவது வழங்க வேண்டும்" என்ற ஒரு வேண்டுகோள் விடுத்தார். அந்தச் சிறப்பான முன்னெடுப்பே இத்தகைய உலக சாதனைக்கு வித்திட்டது என்றால் அது மிகையாகாது.

இந்த சந்தர்ப்பத்தில் "மேட் மில்லியன் டே" தினத்தை வரலாற்றுச் சிறப்புமிக்கதாக மாற்றியதற்காக தங்களது மதிப்புமிக்க வாடிக்கையாளர்கள், முகவர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். ஏனெனில் ஒரே நாளில் மிகப்பெரிய எண்ணிக்கையிலான பாலிசிகளை வழங்கியதில் அவர்களின் நம்ப முடியாத செயல்திறன் இப்போது அங்கீகரிக்கப்பட்டு கின்னஸ் உலக சாதனைகளில் இடம்பிடித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

# மேல்மருவத்தூர் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் நாணய திருவிழா

மேல்மருவத்தூர், மே 27–

ரிசர்வ் வங்கியும், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியும் இணைந்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நாளை நாணய திருவிழா நடத்துகின்றன.

தூத்துக்குடியை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் கிளையும், இந்திய ரிசர்வ் வங்கியும் இணைந்து நாளை (28–ம் தேதி) புதன் கிழமை வங்கி கிளையில் நாணய திருவிழா நடத்துகின்றன.

இந்நிகழ்ச்சியில் கிழிந்த மற்றும் பழைய சேதமடைந்த ரூபாய் நோட்டுகள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு அதற்கு பதிலாக நல்ல ரூபாய் நோட்டுகள் கொடுக்கப்படும். அத்துடன் குறைந்தபட்ச வைப்பு தொகை இல்லாமல் சேமிப்பு கணக்கு தொடங்க பொதுமக்களிடமிருந்து விண்ணப்பித்து பயனர்கள் பயன் பெறும் திட்டமும் நடைபெற உள்ளது. இந்த முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் மேல்மருவத்தூர் கிளை சார்பில் தெரிவித்துள்ளது




செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த கேளம்பாக்கம் ஊராட்சியில் பத்தாம் வகுப்பில் 400 க்கும் மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்ற 55 மாணவ மாணவியரை ஒருங்கிணைத்து அவர்களுக்கு ஊக்க தொகையுடன் கல்வி உபகரண பொருட்களை சமூக ஆர்வலரும்,ஜோதி நகர் திமுக கிளை செயலாளரும், தொழிலதிபருமான கே ஏ டி அன்பு மற்றும் திமுக மகளிரணி நிர்வாகி தனக்கோடி அன்பு ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து மாணவ மாணவியரின் பெற்றோர்களுக்கு சந்தன மாலையுடன் சால்வை அணிவித்து பாரிஜாதம் உள்ளிட்ட மரக்கன்றுகளை வழங்கினர், நிகழ்ச்சியில் ஜோதி நகர் திமுக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் சமூக ஆர்வலர்கள் மாணவ மாணவியரின் கலந்து கொண்டனர்..


## அழகேந்திரன் நிதி லிமிடெட்

Alagendra's Since 1960

CIN : U65991TN1992PLC023989

பதிவு அலுவலகம்: ஜம்பு டவர்ஸ், 2வது தளம், நெ.99, நியூ ஆவடி சாலை, கீழ்பாக்கம், சென்னை – 600 010 PH: 044-26471384/85

Website: www.alagendrannidhi.net | Email: info@alagendrannidhi.net

### நகைக் கடன் ஏல அறிவிப்பு

பல்வேறு கிளைகளில் எங்களிடம் நிதியின் உறுப்பினர்கள் ஈடு வைத்த தங்க நகைகளை பணம் கட்டி மீட்கத் தவறியதால் அவை வரும் 27.06.2025 அன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் மதுரை வடக்குவெளி வீதி, ஞானஒளிவுபுரம், கே.புதூர், வில்லாபுரம் & திருமங்கலம், திருச்சி தில்லை நகர் & வரகனேரி கிராமம், கோயமுத்தூர் காந்திபுரம், சென்னை கீழ்பாக்கம், மேற்கு மாம்பலம் & தாம்பரம், தேனி, ஈரோடு, சேலம், சிவகாசி, விளாத்திகுளம், திருநெல்வேலி, ராஜபாளையம், நாகர்கோவில், திருப்பூர், திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் கிளைகளில் ஏலம் விடப்படுவதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழே குறிப்பிட்ட காலங்களில் பெற்ற கடனை, செலுத்த வேண்டிய கெடு முடிவடைந்ததால்:

1. 28.02.2025 அன்று 12 மாத கெடுவில் கடனைத் திருப்புவதாகக் கூறி 29.02.2024க்கு முன் கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தாதவர் களின் நகைகளும்
2. 28.02.2025 அன்று 9 மாத கெடுவில் கடனைத் திருப்புவதாகக் கூறி 31.05.2024க்கு முன் கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தாதவர் களின் நகைகளும்
3. 28.02.2025 அன்று 6 மாத கெடுவில் கடனைத் திருப்புவதாகக் கூறி 31.08.2024க்கு முன் கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தாதவர் களின் நகைகளும்
4. 28.02.2025 அன்று 3 மாத கெடுவில் கடனைத் திருப்புவதாகக் கூறி 30.11.2024க்கு முன் கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தாதவர் களின் நகைகளும்

மற்றும் கடனை திருப்பித்தர வேண்டி தேதி எதுவாக இருப்பினும், மதிப்பீட்டுத் தொகையை விட அதிகமாக இருக்கும் கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்தாதவர்களின் தங்க நகைகளையும், ஏலத்தில் விடுவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய கடன்தாரர்கள் கடனை திருப்பிச் செலுத்தும்படி கூறி, முறைப்படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. மற்றும் ஏல அறிவிப்பும் அனுப்பப்பட்டு வருகிறது. கடன்தாரர்கள் முழு பாக்கித் தொகைகளையும், கீழே குறிப்பிட்டுள்ள ஏலத் தேதிக்கு முன், மேற்படி கிளைகளில் பணம் செலுத்தி கடனை தீர்க்காவிட்டால் அவர்களால் ஈடு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் 27.06.2025 அன்று மதியம் 3.00 மணியளவில் நிதியின் அனைத்து கிளைகளிலும் கடன்தாரர்கள் பொறுப்பில் பகிரங்க ஏலம் விடப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கடன்தாரர்கள் பெயர், முகவரி, கணக்கு எண், ஈடு வைக்கப்பட்டுள்ள தங்க நகையின் விபரம், எடை முதலிய விவரங்கள் அந்தந்த கிளை அலுவலகத்தில் அறிவிப்பு பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:**

நிதியின் சட்ட விதிகளின்படி தங்க நகைகள் ஏலம் விடப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் முன்பணமாக ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும். ஏலம் எடுத்தவர்கள் ஏலம் முடிந்தவுடன் முழுத்தொகையும் பணமாக செலுத்த வேண்டும். முன்னறிவிப்பின்றி ஏலத்தை ரத்து செய்யவோ தேதி மற்றும் இடத்தை மாற்றவோ நிதிக்கு முழு அதிகாரம் உண்டு.

**தேதி: 27.05.2025** **மேலாண் இயக்குனர்**



## GENERAL NOTICE

**IN THE COURT OF THE HON'BLE PRINCIPAL DISTRICT JUDGE AT KANCHEEPURAM**

**Trust O.P.No: 53 of 2025**

**(In the matter of Vaidheeka Dharma Sasthra Prachara Sabha and Charitable Trust Rep by its Managing Trustee)**

**M/s. Vaidheeka Dharma Sasthra Prachara Sabha and Charitable Trust Rep by its Managing trustee Mr. V.Narasimhan S/o Navalpakkam Varadhachari Having office at: Vaidheeka Dharma Sasthra Prachara Sabha and Charitable Trust, No:7, 29th street, Nanganallur, Chennai 600061** ... Petitioner

-Vs-

NIL ... Respondents

### General Notice

Take notice that the petitioner has filed the above petition praying for permission to sell the petition mentioned property Plot no: 361 measuring 2100 Sqft. In "PALLAVAN NAGAR" approved by D.T.C.P vide its No: L.P/D.T.C.P.NO:36A/89 and also counter signed by the local body commissioner sriperumbudur panchayat union in R.O.C.NO:3682/88-A.5 comprised in Survey No: 355/1 as per patta no: 5702 the new survey No:355/23 situated in old village no:98, new village no:56, KATRAMBAKKAM Village, Sriperumbudur Taluk, Kanchipuram District and another Plot no: 353 measuring 2100 Sqft. comprised in Survey No: 351/66 & 355/13 as per patta no: 6235 situated in old village no:98, new village no:56, KATRAMBAKKAM Village, Sriperumbudur Taluk, Kanchipuram District under the Indian Trust Act and that the said suit has been posted on for the hearing of the said Trust O.P.No:53 of 2025. If anybody interested to say objection in the above matter, they must appear before this court on the 16/06/2025 at 10.00 A.M. to show cause against the petition either in person or duly authorized pleader and be prepared to adduce any documentary evidence upon which you rely and that in default of appearance, the above application will be heard and determined in your absence.

**B.VIGNESH,** BSC, LLB., (Hons),
**ADVOCATE.**
**No: 01, Vishnu Prakash Nagar, 1st Floor, Bharat Petrol Oppo, Sriperumbudur Town/Taluk, Kanchipuram -602105.**
**Email: vigneshlegal13@gmail.com, Cell: 8056113572**



## ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் SHRIRAM Finance

முன்னர் M/s. ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் என அழைக்கப்பட்டது.
நுங்கம்பாக்கம் கிளை, 861, C-2, இரண்டாவது தளம், பூந்தமல்லி ஹை ரோடு, கீழ்பாக்கம், சென்னை – 600 010.

### கோரிக்கை அறிவிப்பு

**பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002–ன் (பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு நிதிச் சொத்துக்கள் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம் அமலாக்கம், 2002) சட்டப் பிரிவு 13(2)யின் கீழ் அறிவிப்பு ஒன்று**

**1. M/s. கார்கோவிங்ஸ்ஸ் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட், அதன் நிர்வாக இயக்குனர் திரு. பி.வி.சுப்ரமணி, நெ.54, CMD டிரக் டெர்மினல் காம்ப்ளாக்ஸ், GNT ரோடு, மாதவரம், திருவள்ளூர் – 600 110.**

**2. திரு. பி.வி.நாராயணசாமி த/பெ.P.R.விஸ்வநாதன், பிளாட் எண்.T2, 3வது தளம், ரியர் போர்ஷன் அபார்ட்மெண்ட், எண்.1289, 27வது தெரு, கம்பர் காலனி, அண்ணா நகர், சென்னை – 600 040.**

**ஆகியோர் முகவரிக்கு அஞ்சல் மூலமாக 18.04.2025 அன்று தபால் அனுப்பப்பட்டது.**

**பொருள்: M/s. ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் என அழைக்கப்பட்டது) நுங்கம்பாக்கம் கிளையில் வைத்துள்ள வணிக கடன் கணக்கு எண்கள். தொடர்பாக**

| வ. எண். | கடன் எண் | கடன் பெயர் | கடன்தாரர் | ஜாமீன்தாரர் |
|---|---|---|---|---|
| 1. | PRBURO707010003 | BL-INS | M/s. கார்கோவிங்ஸ்ஸ் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட் | பி.வி.நாராயணசாமி |
| 2. | PRBURO707010003 | FBWCL | M/s. கார்கோவிங்ஸ்ஸ் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட் | பி.வி.நாராயணசாமி |

**நீங்கள் மேற்படி கடன் கணக்கு தொடர்பாக 18.04.2025 அன்றுள்ளபடி 2 கடன் சேர்த்து ரூபாய் 14,77,02,078/– (ரூபாய் பதினாக்கு கோடியே எழுபத்தேழு லட்சம் இரண்டாயிரத்து எழுபத்தெட்டு மட்டும்) இன்னும் நிலுவையில் உள்ளது மற்றும் கடன் ஒப்பந்த தேதி முதல் அத்தொகை செலுத்தப்படும் வரையில் ஒப்புக் கொள்ளப்பட்ட வீதத்தில் தவறிவிட்டீர்கள். மேற்படி சட்டத்தின் கீழ் கம்பெனியானது 18.04.2025 அன்றுள்ளபடி நிலுவைத் தொகை ரூபாய். 14,77,02,078/– செலுத்த கோரி 18.04.2025 அன்று ஒரு அறிவிப்பு மேல் காணும் உங்கள் இருவருக்கும் அனுப்பப்பட்டது. அதில், மேல் உள்ள 1ம் நபருக்கு அனுப்பிய அறிவிப்பு திரும்பி வந்துவிட்டன மற்றும் 2ம் நபருக்கு அனுப்பிய அறிவிப்பு அவர்கள் கைக்கு சென்று அடைந்துவிட்டது. எனவே, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், கடன் நிலுவைத் தொகை 18.04.2025 அன்றுள்ளபடி ரூபாய். 14,77,02,078/– (ரூபாய் பதினான்கு கோடியே எழுபத்தேழு லட்சம் இரண்டாயிரத்து எழுபத்தெட்டு மட்டும்) கடன் ஒப்பந்த தேதி முதல் அத்தொகை செலுத்தப்படும் தேதி வரையான வட்டியையும் சேர்த்து செலுத்துமாறு இதன்மூலம் உங்களிடம் கோரப்படுகிறது.**

**அதாவது தற்போது நீதிமன்றம் முன்னிலையில் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைகளுக்கு பெறப்பட்ட / பெறப்படவுள்ள ஆணைகள் / தீர்ப்பு ஆணைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு கம்பெனிக்கு எந்தவொரு உரிமைகளுக்கும் பாதகமின்றி இந்த அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.**

### அசையா சொத்து விபரம்

### (கிரய பத்திரம் ஆவண எண்.1995/2011யின் படி)

**வில்லிவாக்கம் கிராமத்தின் R.S.No.141 பகுதி, 161 பகுதி மற்றும் T.S.No.118 இல் விவரிக்கப்பட்டுள்ள மொத்த பரப்பளவு 1/6 பிரிக்கப்படாத பங்கு (கருத்தியல் அளவு 562.5) நிலத்தின் மொத்த பரப்பளவு 1 கிரவுண்ட் மற்றும் 975 சதுர அடி அல்லது அதற்கு அருகில் உள்ளது. இதில் மூன்றாவது மாடியில் உள்ள குடியிருப்பு பிளாட் எண்.2 இல் 1100 சதுர அடி (பொது பகுதியின் விகிதாசார பங்கு உட்பட) ஒரு சூப்பர் பில்ட் அப் பகுதி உள்ளது. இது 28.09.2011 தேதியிட்ட சென்னை பெருநகர மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்பட்ட திட்டமிடல் ஒப்புதல் எண்.220/2011இன் படி கட்டப்பட்டது மற்றும் "ரியர் போர்ஷன் அபார்ட்மெண்ட்" என்று அழைக்கப்படுகிறது. மேலும் மேற்கூறிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புடன் மேற்கூறிய கட்டிடத்தில் ஒதுக்கப்பட்ட மூடப்பட்ட கார் பார்க்கிங் உள்ளது. இது சென்னை மத்திய பதிவு மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.**

**தேதி: 16.05.2025** **Sd / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**இடம்: சென்னை** **M/s. ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்**



## SUNDARAM FINANCE

*Enduring values. New age thinking.*

### 31 மார்ச் 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

(₹ கோடிகளில்)

| விவரங்கள் | தனித்தது | | | | | ஒருங்கிணைக்கப்பட்டது | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிவடைந்த காலாண்டு 31.03.2025 | முடிவடைந்த காலாண்டு 31.12.2024 | முடிவடைந்த காலாண்டு 31.03.2024 | முடிவடைந்த ஆண்டு 31.03.2025 | முடிவடைந்த ஆண்டு 31.03.2024 | முடிவடைந்த காலாண்டு 31.03.2025 | முடிவடைந்த காலாண்டு 31.12.2024 | முடிவடைந்த காலாண்டு 31.03.2024 | முடிவடைந்த ஆண்டு 31.03.2025 | முடிவடைந்த ஆண்டு 31.03.2024 |
| இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 1,803.39 | 1,648.06 | 1,571.69 | 6,520.44 | 5,479.94 | 2,259.05 | 2,190.31 | 2,155.89 | 8,485.63 | 7,267.12 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான (வரிக்கு முன், தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 726.92 | 467.40 | 465.80 | 2,061.68 | 1,696.67 | 764.78 | 600.77 | 632.33 | 2,447.39 | 2,052.85 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன், (தனிப்பட்ட வகைகளுக்குப் பின் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 726.92 | 467.40 | 599.65 | 2,061.68 | 1,830.52 | 764.78 | 600.77 | 540.61 | 2,447.39 | 1,961.13 |
| நிகர இலாபம் / (நஷ்டம்) நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின், (தனிப்பட்ட வகைகளுக்குப் பின் மற்றும் / அல்லது அசாதாரண வகைகள்) | 545.85 | 349.06 | 506.28 | 1,542.65 | 1,454.01 | 552.98 | 455.47 | 472.41 | 1,879.44 | 1,842.36 |
| கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது | 545.85 | 349.06 | 506.28 | 1,542.65 | 1,454.01 | 552.98 | 455.47 | 267.91 | 1,879.44 | 1,436.02 |
| மற்ற உரிமையாளருக்கானது | - | - | - | - | - | - | - | 204.50 | - | 406.34 |
| நடப்புக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [நடப்புக் காலத்திற்கான (வரிக்குப் பின்) உள்ளடக்கிய இலாபம் / (நஷ்டம்) மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்)] | 551.46 | 153.08 | 1,104.68 | 1,994.12 | 2,050.96 | 592.68 | 245.29 | 1,168.36 | 2,442.88 | 3,210.76 |
| கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது | 551.46 | 153.08 | 1,104.68 | 1,994.12 | 2,050.96 | 592.68 | 245.29 | 901.20 | 2,442.88 | 2,244.22 |
| மற்ற உரிமையாளருக்கானது | - | - | - | - | - | - | - | 267.16 | - | 966.54 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 111.10 | 111.10 | 111.10 | 111.10 | 111.10 | 110.21 | 110.21 | 110.20 | 110.21 | 110.20 |
| ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | 11,028.00 | 10,630.63 | 9,360.59 | 11,028.00 | 9,360.59 | 13,086.62 | 12,646.74 | 10,968.02 | 13,086.62 | 10,968.02 |
| பங்கு பிரீமியம் கணக்கு | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil |
| நிகர மதிப்பு | 11,139.10 | 10,741.73 | 9,471.69 | 11,139.10 | 9,471.69 | 13,196.83 | 12,756.95 | 11,078.22 | 13,196.83 | 11,078.22 |
| செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 47,359.12 | 46,382.89 | 40,925.11 | 47,359.12 | 40,925.11 | 61,149.70 | 59,631.05 | 52,415.99 | 61,149.70 | 52,415.99 |
| நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil | Nil |
| கடன் பங்கு விகிதம் | 4.25 | 4.32 | 4.32 | 4.25 | 4.32 | 4.63 | 4.67 | 4.73 | 4.63 | 4.73 |
| அடிப்படை மற்றும் டைல்யூட்டட் EPS (அடிப்படை & நீர்த்தது) (முக மதிப்பு ₹10/-) (காலாண்டிற்கு ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (on PAT) | 49.13 | 31.42 | 45.57 | 138.85 | 130.87 | 50.17 | 41.33 | 24.31 | 170.53 | 130.31 |
| மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil | Nil | Nil | 15.00 | 15.00 | 15.00 | 15.00 | 15.00 |
| மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | Not applicable | | | | | | | | | |
| கடன் சேவை கவரேஜ் விகிதம் | | | | | | | | | | |
| வட்டி சேவை கவரேஜ் விகிதம் | | | | | | | | | | |

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (URL : www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaramfinance.in) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. மார்ச் 31, 2025ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினரால் மே 23, 2025 அன்று மதிப்பாய்வு செய்யப்பட்டு, மே 26, 2025 அன்று சென்னையில் நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
3. மே 26, 2025 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் 2024–25ம் நிதியாண்டிற்கு ஒவ்வொரு பங்கிற்கும் இறுதி டிவிடெண்டாக ரூ.21/– வீதம் (210%) பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இடைக்கால டிவிடெண்டாக ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 14/– வீதம் (140%) ஏற்கனவே பிப்ரவரி 2025ல் செலுத்தப்பட்டதை சேர்த்து மொத்த டிவிடெண்டாக ஒரு பங்குக்கு ரூ.35/– வீதம் (350%) வழங்கப்படுகிறது.
4. மார்ச் 2024ல் முடிவடைந்த காலாண்டில் சுந்தரம் ஃபைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனம், குழுமத்தின் துணை நிறுவனமாக நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, மார்ச் 2024ல் முடிவடைந்த காலாண்டில் இருந்து IND AS 109ன் படி மற்ற விரிவான வருமானத்தின் மூலம் முதலீட்டை நியாயமான மதிப்பில் நிறுவனம் அங்கீகரிக்கத் தொடங்கியது. மார்ச் 2025 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிட முடியாது.
5. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
6. மார்ச் 31, 2025ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் கூட்டு சட்டரீதியான தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

சென்னை
26.05.2025

**போர்டின் உத்தரவுப்படி**
**ராஜீவ் C. லோச்சன்**
**நிர்வாக இயக்குநர்**

## சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்

CIN:L65191TN1954PLC002429
பதிவு பெற்ற அலுவலகம் : 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002.
Tel: 044 2852 1181, Fax: 044 2858 6641
Email: investorservices@sundaramfinance.in www.sundaramfinance.in